C.N 300
205
177



ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு.

# எண்ணெய்ச் சிந்து

தொகுப்பாசிரியர்
"தமிழ் மணி"
விவேகானந்தமுதலியார்

விலை: 50/- ரூபா

HAMPALA VID...
LIBRARY
Book No 205



சித்தியொடு முத்திவரும் சீர்சால் புகழ் பெருகும்
வித்தையொடு புத்தி விரிந்தோங்கும் - சித்தமுடன்
ஆரையூர்த் திருநீல கண்ட விநாயகர்தம்
பேரை உரை செய்யும்பேறு.

மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமரகர்ண விளம்பித சூத்ர
வாமனரூப மகேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே

உ

சிவமயம்

# மட்டக்களப்புத் தமிழக
# எண்ணெய்ச் சிந்துப் பாடல்

புதிய முறையில் முகவுரை, சிறப்புப்பாயிரம்

கருத்துரைகளமைத்து

திருத்திப் பிரசுரித்தவர்


தமிழ்மணி

## சிவ. விவேகானந்த முதலியார்

(ஓய்வுபெற்ற அதிபர்)

ஆரையம்பதி - 02.



**1995**

தொகுப்பு: 1972 ★ பதிப்பு: 1995


## அர்ப்பணம்

என்னை யீன்று இதமாய் வளர்த்த
அன்னை தந்தையர்க் கர்ப்பண மிந்நூல்.

வணக்கம்


பதிப்புரிமை: தொகுப்பாசிரியருக்குரியது.

கணபதி துணை



பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரண வற்புதமலர் தலைக் கணிவோமே.

திருவுங் கல்வியுஞ் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாளத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

ஆனை முகனே அரனார் திருமகனே
கானமதம் பாயுமொரு கையோனே — ஞானமுற
வித்தகர்க்கும் பிள்ளைகட்கும் விக்கினங்கள் வாராமல்
நித்த நித்தம் நீதுணையாய் நில்.

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்

## ஆசிரியரும், மாணாக்கரும், ஏடுகளும், எழுத்தாணிகளும்.



## குருவணக்கம்

அரிஓம் குருவாழ்க, குருநாதன் வாழ்க,
எந்தன் வாழ்க, எந்தன் ஆசாரியன் வாழ்க,
எவ்வாணை மறக்கினும் குருவாணை மறவேன்,
எந்தைதாய் தெய்வத்தை எந்நாளும் போற்றுவ:னே.

அந்தியே போறோம் நாங்கள் அகத்திலே விளையாடாமல்
சிந்தையாய் விளக்கும் வைத்துச் சுவடியும் படித்துக்கட்டி
அந்தமா அமுதுமுண்டு அறிவுடன் பள்ளிகொண்டு
கொந்த மாஞ்சேவல் கூவக் கூப்பிட வாறோமையா.

குருபாதம்சரணம்.

இராமக்கிருஷ்ண சங்கம்
மட்டக்களப்புக் கிளை

வணக்கத்திற்குரிய

# ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தஜீ மகராஜ்

அவர்கள் வழங்கிய

# ஆசிச் செய்தி

அன்புடையீர்,

தமிழ்மணி சிவ. விவேகானந்த முதலியார் அவர்கள் மட்டக்களப்பு தமிழக எண்ணெய்ச் சிந்துப்பாடல்களைத் தொகுத்து வெளியிட முன்வந்திருப்பது, மட்டக்களப்பு பாரம்பரிய கலைப்பிரியர்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாகும்.

இப்பாடல்கள் அந்நாளைய மக்களின் சிந்தனைகளையும், சமுதாய அமைப்பு முறைகளையும் பிரதிபலிப்பனவாக அமைந்துள்ளன.

அருகிக்கொண்டுவரும் இத்தகைய பாடல்களைஅச்சேற்றிப் புத்துயிரூட்ட அரும்பணியாற்றிக்கொண்டிருக்கும் தமிழ்மணி சிவ. விவேகானந்த முதலியார் அவர்கள் அனைவரினதும் பாராட்டுதலுக்குரியவர். இத்தகைய இலக்கிய, சமயப்பணிகளை மேலும் தொடர்ந்துசெய்ய எல்லாம்வல்ல இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளை வழங்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

இறைபணியிலுள்ள,

**சுவாமி அஜராத்மானந்தா**

28—05—95.

வட கிழக்கு மாகாண சபை முன்னாள்
உதவிக் காரியதரிசி

# தமிழ்மணி இரா. நாகலிங்கம் (அன்புமணி) அவர்கள்

## மனமுவந்தளித்த

# அணிந்துரை

'' எண்ணெய்ச் சிந்து நம் அனைவரினதும்
எண்ணச் சிந்தாக வேண்டும் ''

எண்ணெய்ச் சிந்து என்றதும் அது ஏதோ கிராமத்துப் பாடல் என ஒதுக்கிவிடும் மனப்பாங்கு இன்றைய நாகரீக சூழலில் ஏற்பட்டுள்ளது. அதைப் படிக்கும் போதுதான் அது எவ்வளவு ஆழமான கருத்துக்களைப் பொதிந்துள்ளது என்பதை உணரமுடிகிறது.

தாய் தந்தையரைத் தெய்வமாக மதித்துப் போற்ற வேண்டுமென்ற ஆத்மீகத் தத்துவம் சங்க காலம் முதல் பல பண்டைய புலவர்களின் பாடல்களில் விரவிக் கிடப்பதைப் பார்க்கின்றோம். மனித விழுமியங்களில் இது தலையாயதாகக் கருதப்படுகிறது. ஔவையார், திருவள்ளுவர் முதலானோர் இதைப் பன்னிப் பன்னிச் சொல்லியிருக்கின்றனர்.

1. மாதா, பிதா, குரு, தெய்வம்.
2. ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்''
3. ''தந்தை சொல்மிக்க மந்திரமில்லை
   தாயிற் சிறந்த கோயிலுமில்லை''
4. ''தந்தை தாய் பேண்''

இத்தகைய தத்துவக் கோட்பாடுகளின் காரணமாகவே நமது பண்பாடு நீண்ட நெடுங்காலம் நிலைத்து நிற்கின்றது. நமது பாரம்பரியம் கட்டுக்கோப்பாக வளர்ந்துள்ளது. அன்பு, பாசம், தியாகம் முதலிய நற்பண்புகள் இதன்காரணமாகவே நமதுசமுதாயத்தில் வேரூன்றியுள்ளது

இத்தத்துவத்தைப் பாமரமக்களும் நன்கு உணர்ந்து நடைமுறையில் கடைப்பிடிக்கும் வண்ணம் கிராமியப் பாடலாக சிந்து வடிவில் யாரோ ஒரு ஏடறியாப் புலவன், நாடறியாக் கவிஞன் எண்ணெய்ச் சிந்தை ஆக்கித் தந்துள்ளார்.

இதன் மகத்துவத்தை நன்குணர்ந்த நமது தமிழ்மணி சிவ. விவேகானந்த முதலியார் தமக்கே உரிய பாணியில் மிகச்சிறப்பான முறையில் தொகுத்துத் தந்துள்ளார். அரும்பதங்களுக்கு விளக்கமும் கொடுத்துள்ளார்.

குறிப்பாக இவர் எழுதியுள்ள முன்னுரையில் அந்தக்காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் மூலம் வளர்ந்த நற்பண்புகளையும், ஆசிரிய, மாணவ நல்லுறவையும், இதன் அடிப்படையில் தோன்றி வளர்ந்த எண்ணெய்ச் சிந்துப் பாடல்களின் உட்பொருளையும் எவரும் விளங்கிக் கொள்ளும் வண்ணம் சுவைபடத்தருகிறார்.

ஏடு, எழுத்தாணியென்றால் என்னவென்றே தெரியாத இன்றையத் தலைமுறையினருக்கு அவர் தரும் விளக்கம் அந்தக்காலக் கல்விமுறையில் ஏடுகள் வகித்த முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்துகிறது.

எத்தனை கஷ்டங்களுக்கு மத்தியில் அந்தக் கால மாணவர்கள் திண்ணைப்பள்ளிக் கூடங்களில் கல்வி கற்றுப் பண்புள்ள மனிதர்களாகவும் தமிழறிஞர்களாகவும் மாறினார்கள் என்பதை அறியும்போது இன்றைய வானளாவுங் கல்விக்கூடங்களும், நவீன கற்பித்தல் வசதிகளும், நீளமான பட்டங்களைப்பெற்ற ஆசிரியர்களும் என்னபயனும் இல என்று எண்ணத் தோன்றுகிறது. பண்பை வளர்ப்பதில் இந்த அற்பமான எண்ணெச் சிந்துகூட எவ்வளவு முக்கியமானது என்பதை நோக்கும்போது மனம் நெகிழ்கிறது.

தமக்குக் கல்வி போதித்த ஆசிரியருக்கு எண்ணெய் சேகரித்துக் கொடுப்பதற்காக வீடுவீடாகச்சென்று மாணவர்கள் இப்பாடல்களைப் பாடினார்கள் என்பதை அறியும்போது கண்கள் பனிக்கின்றன. பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்லு என்பார்கள். இந்த எண்ணெய்ச்சிந்துப் பாடல்களின் வரிகள் அந்தக்கல்லையும் கரைக்கும் வண்ணம்

அமைந்துள்ளன. எத்தகைய கல் நெஞ்சம் படைத்த பிள்ளையும் இப்பாடலைக் கேட்டால், அதன் கருத்தை உணர்ந்தால் நெஞ்சம் நெக்குருகிக் கரைந்துபோகவே செய்வான்.

''தந்தையருந்தாயும் தயவு கொண்ட நாளையிலே
வந்துற்ப வித்தோங்காண் மாதாவின் உந்தியிலே
உற்பவித்த நாள்முதலாய் உங்கள் வருத்தமது
இத்தனையென்று எடுத்து ரைக்கப் போகாது''

''எட்டுமாதத்தில் இருந்தெழும்ப மாட்டாமல்
கட்டுகள் விட்டுக் கடுப்பு மிகவுண்டாகி
ஒன்பது மாதத்தில் ஓயாத நோக்காடாய்
துன்பமது வாகித் துயரமிக வுண்டாகி''

இப்படி இச்சிறு பிரபந்தத்தில் பொதிந்துள்ள 107 அடிகளும் உள்ளத்தைத் தொடுகின்றன. ஊனை உருக்குகின்றன. இதைப்படிக்கும்போது குழந்தைப் பருவத்தில் தாயார் நம்மை எப்படியெல்லாம் பாதுகாத்தார் என்ற எண்ணங்கள் சங்கிலித்தொடராய் நீளுகின்றன. கண்ணீர்த் துளிகள் மாலையாய் சேருகின்றன.

இதன் காரணமாகவே, தாய் தந்தையரை இறைவனின் மறு அவதாரம் என்கிறோம். இறைவன் எந்நேரமும் தன்கருணை மனிதனைச் சூழ்ந்திருக்க வேண்டுமென்பதற்காக பெற்றோரைத்தன் பிரதிநிதியாகப் பூமிக்கு அனுப்புகிறான். இறைவன் சார்பில் அவர்கள் நம்மைப் படைத்துக் காத்துப் பராபரிக்கின்றனர்.

" டில்லிக்கு ராஜாவானாலும் தாய்க்குப் பிள்ளைதான் "

என்பார்கள் நாம் திருமணம் முடித்துக் குழந்தை குட்டிகள் பெற்ற பின்பும், இன்னும் நம்மைக் குழந்தையாகவே கருதிச் சோறூட்டிவிடும்போதும், தனக்குக் கிடைக்கும் பட்சணங்களை முன் தானையில் மறைத்துக் கொண்டுவந்து கொடுக்கும்போதும் அத்தாயுள்ளத்தை என்னவென்று சொல்வது? ''தாயே நீ நிச்சயமாக இறைவனின் அவதாரந்தான்'' என்று சொல்லத்தோன்றுகிறதல்லவா?


துரதிஷ்டவசமாக இன்றைய நவீனப்போக்குகளால் இந்தத் தாய் தந்தைப் பாசம் மறைந்து வருகிறது.

அப்படியாகாமல் தடுத்து நிறுத்துவதற்கு ஒவ்வொரு குழந்தையும் இந்த எண்ணெய்ச் சிந்துப் பாடலை மனனம் செய்ய வேண்டும். தேவார, திருவாசகம் போல் அடிக்கடி பாடவேண்டும். அப்படிப்பாடும் சந்தர்ப்பத்தை நாம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். பாடசாலைகளில் கீழ் வகுப்புகளில் சமயப் பாடத்திட்டத்தில் இது சேர்த்துக்கொள்ளப் படவேண்டும், இந்து கலாசாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் ஒவ்வொரு அறநெறிப் பாடசாலை மாணவருக்கும் இது கிடைக்கச்செய்ய வேண்டும்.

தமிழ்மணி சிவ. விவேகானந்த முதலியார் கடந்த காலங்களில் கந்த சஷ்டி விரதப்பாடல்கள், சிவ ராத்திரி விரதப் பாடல்கள், மரணச்சடங்குப் பாடல்கள் என நடைமுறையில் பாராயணம் செய்யக்கூடிய வகையில் சமய இலக்கியங்களிலுள்ள தேனைச் சேகரித்துக்கொடுத்தார். அப்பணியின் தொடர்ச்சியாக இப்போது அவர் எண்ணைச் சிந்துப் பாடல்களின் தேனை எடுத்துக் கொடுத்துள்ளார். தேனின்பயன் அளப்பரியது. அத்தேனை மாத்தி எண்ணெய்ச் சிந்துப் பாடல்களை நமது எண்ணச் சிந்தாக மாற்றுவோம்.

— இரா. நாகலிங்கம் —
(அன்புமணி

'பார்வதி அகம்',
ஆரையம்பதி-01,
15—05—95.



மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத் தலைவரும்,
முன்னாள் கல்வி அதிகாரியுமான

# திரு. ம. சிவநேசராசா B. A. அவர்களின்

# சிறப்பு அணிந்துரை

மட்டக்களப்பு, தமிழும் சைவமும் தழைத்த நாடு. நீண்ட காலத்தின் முன் தமிழர் இப்பிரதேசத்தில் குடியேறி தமது வாழ்க்கையை நடத்தி வந்தனர். சமய நாகரீக வளர்ச்சிக்கு, கல்வி வளர்ச்சி இன்றியமையாததாகும். அக்காலத்திலேயே, நம்மக்கள் கல்வியில் கொண்ட நாட்டத்தைக் காட்டும் சான்றாக "எண்ணெய்ச்சிந்துப் பாடல்கள்" விளங்குகின்றன.

இன்று கல்வி பாலர் வகுப்பு முதல் பல்கலைக் கழகம் வரை இலவசமாக வழங்கப்படுகிறது. உணவும், உடையும் இலவசமாக வழங்கப்படுகிறது. இவற்றுக்கு மேலாக புலமைப் பரிசில்களும் வழங்கப்படுகின்றன. இற்றைக்கு இருநூறு முன்னூறு ஆண்டுகளின் முன் கல்வி வசதிகள் மிகவும் அருகியே காணப்பட்டன.

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே"

என்ற உயர்ந்த நோக்குடையவர்கள் தமிழர், எனப் புறநானூறு காட்டுகிறது. அவ்வழிவந்த மட்டக்களப்பு தமிழ்மக்களும் மிகச் சிரமப்பட்டுக் கல்வியை வழங்கினார்கள். என்பதைக்காட்டும் சான்றாக எண்ணெய்ச்சிந்து விளங்குகின்றது.

இந்த நூலில் சூல் கொண்டது முதல் தாய் அனுபவித்த சிரமங்களை ஆசிரியர் மிகச்சிறப்பாக எடுத்துக் காட்டுவதை சிந்து 15 — 23 வரை பாடியிருப்பதைப் பார்க்கலாம். இதை நோக்குகையில், திருவாசகத்தின் போற்றித் திருவகவலில்—

"ஒருமதித் தான்றியில் இருமையிற் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈரிருதிங்களில் பேரின் பிழைத்தும்"

''அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களில் ஊறலர் பிழைத்தும்
ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்கதசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்''

என 15—23 வரும் பகுதி நினைவுக்கு வருகிறது. மாணிக்க வாசகர் தாய் கருவுற்றது முதல் உடலின் உள்ளே (கருப் பையில்) நடக்கும் மாற்றங்களைக் காட்ட, எண்ணெய்ச் சிந்து ஆசிரியர் உடலின் வெளியே நடக்கும் மாற்றங் களைக் காட்டுகிறார்.

கற்பிக்கும் ஆசிரியருக்கு வேதனமாக அயலிலே எண்ணெய், அரிசி, பழம், தேங்காய், புளி மிளகு முதலிய பொருட்களைச் சேகரித்துக் கொடுத்த வழக்கம் உருக்கமாக எடுத்துக்காட்டப்படுகிறது. அதேவேளையில் வழங்கப்பட்ட கொடுமையான தண்டனை முறைகளையும் நாம் காண் கின்றோம். இவை நம்மை உலுக்குகின்றன.

ஆண்குழந்தை பிறந்ததும் மகிழ்ச்சியில் வீட் டுக்கு மேலால் உலக்கையை எறியும் வழக்கம் போன்றவை களும் காட்டப்படுகின்றன. இத்தகைய அரிய செய்திகள் கொண்ட அரிய நாட்டார் இலக்கியத்தைத் தேடி முகவுரை எழுதிப் பதிப்பிக்கும் தமிழ்மணி சிவ. விவேகானந்த முதலி யாரின் முயற்சி பாராட்டுதற்குரியது.

எண்ணெச்சிந்துப் பாடல்கள் மட்டக்களப்புப் பகுதியில் மிகவும் பிரபலம் பெற்றவை. ஆரம்பகாலத்தில் இப்பாடல்களைப் பாடித் திண்ணைப் பாடசாலை ஆசிரியர் களுக்கு வேண்டிய பொருள்களைச் சேகரித்தார்கள். பிற் காலத்தில் சைவப்பாடசாலை ஆரம்பிக்க அனுமதி வழங் கப்பட்டபின் அப்பாடசாலைகளை நடத்தவேண்டிய பணத் தைச் சேகரிக்க எண்ணெய்ச் சிந்து பாடுதலை ஒருவழியாகக் கொண்டார்கள். சித்திரை வருடத்தை அடுத்து ஆசிரியர் களும் மாணவர்களும் கிராமத்திலுள்ள வீடுகள் தோறும் செல்வார்கள், அவர்கள் பலகாரங்களும் வழங்கி வரவேற் கப்பட்டு அரிசி, பணம் முதலியன வழங்கினார்கள். தற்

காலத்திலும் இப்படல்களைப் பாடி பணம் சேகரித்ததை நானறிவேன்.

எண்ணெய்ச் சிந்து வெளிவருவது இது முதல் முறையல்ல. தேசிகமணி கா. அருணாசல தேசிகரின் உதவியோடு வித்துவான் F. X. C. நடராசா அவர்கள் மதுரையில் பிரசுரஞ் செய்தார். அதனை மட்டக்களப்பு இந்து சமய அபிவிருத்திச் சங்கம் 1983ல் மறுபிரசுரம் செய்தது. இந்த எண்ணெய்ச் சிந்தில் காப்புச் செய்யுள் ஏழு இடம் பெற இப்போது வெளிவரும் எண்ணெச் சிந்தில் மூன்றே உள்ளன. இரண்டு பாடல்கள் இரண்டுக்கும் பொதுவானவை முந்திய பதிப்பு அகவற் பாவால் அமைய இப்போது வெளிவரும் நூல் முழுவதும் சித்துகளாகவே அமைந்துள்ளன. தாய் சூல் கொண்டது முதல் நிகழும் நிகழ்ச்சிகளும் மற்றொரு கோணத்தில் நோக்கப்படுகின்றன.

வித்துவான் நடராசா அவர்களின் பதிப்பில் -

''ஆண் பிள்ளையென்றே அகமகிழ்ந்து கூரைதட்டி
வாயார வாழ்த்தி வரிசையுடன் கோலெறிந்து''

என ஆண் பிள்ளை பிறந்தபின் நடக்கும் நிகழ்ச்சி குறிக்கப்பட்டு, கூரைதட்டுதல் யாழ்ப்பாணத்திலுள்ள வழக்கு என அடிக்குறிப்பு எழுதப்பட்டுள்ளது.

''இட்டார் பெரியோர் இடாதாரிழி குலத்தோர்
பட்டாங்கிலுள்ள பழமொழி காண்மாதாவே''

என வருகிறது. இது—

''இட்டார் பெரியோர் இடாதாரிழி குலத்தோர்
பட்டாங்கிலுள்ள படி''

தமிழ்பாடற் பகுதியை நினைவூட்டுகிறது. மட்டக்களப்பு நாட்டார் இலக்கியத்தில் அச்சேறவேண்டியவை இன்னும் பலவுள என்ற உண்மையை சிவ.விவேகானந்த முதலியாரின் இந்த நிகழ்ச்சி காட்டுகிறது

சிறந்த தமிழ் அறிஞரும், தமிழ், சைவம் என்பவற்றின் வளர்ச்சிக்கு அயராதுழைப்பவருமான அவரது இம்முயற்சி பாராட்டுதற்குரியது.

மட்டக்களப்பு வரலாறு பற்றிய அரிய கருத்துக்களை அறிந்த அரவது முயற்சி மட்டக்களப்பின் பழம் பெருமையை விளக்கத்துணை புரிவதாக.

— ம. சிவநேசராசா —


25—05—95.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றச்
செயலாளரும்,
முன்னாள் உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாரும்,
தற்போது ஆரையம்பதி 'சரீரம்' திணைக்களத்
தலைவருமான

# திரு. சி. க. பொன்னம்பலம் அவர்கள்

மனமுவந்து தந்த

## பாராட்டுரை



''கல்வி கரையில கற்பவர் நாள் சில'' என்பது மூதுரை. ''கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு'' என்றார் ஔவையார். ''மனிதன் கற்றுக்கொண்டே இருக்கவேண்டும். கற்க மறுப்பவன வாழமறுப்பவன்'' என்றார் ஸ்ரீ இராமக் கிருஷ்ண பரமகம்ச குருதேவர்.

கற்கப்படுவது கல்வியாயிற்று. கசடறக் கற்க வேண்டியதும் கற்றவாறு நன்றொழுக வேண்டியதும் நியதிகளாகும். இந்நியதிகள் கைக்கொள்ளப்பட்டால், பயன் நிச்சயம் கைகூடும். இது வெள்ளிடை மலைபோல் கண்கண்ட உண்மையாகும்.

கற்பவன் மாணாக்கன். கற்பிப்பவன் குரு. குருவை முற்றிலும் நம்பி, அவன் இட்டதைத் தொட்டுச் செய்வது மாணாக்கனின் கடமை. ''குருவில்லா வித்தை பாழ்'' என்பர். குருபக்தியின்றி இறைபக்தியும் இலகுவில் கைவராது: விஸ்வாமித்திர முனிவர் தாடகையைக் கொல்லுமாறு இராம பிரானைப் பணித்தார். தாடகை ஒரு பெண். அவளைக் கொல்வது சத்திரிய தர்மமாகாதேயென இராம பிரான் ஒருகணம் தயங்கினார். மறுகணம் குருவின் சொல்லைத் தட்டமுடியாதேயென்ற சிந்தனையும் அவரைப் பற்றிக்கொண்டது. பலனைக் குருவிற்கே அர்ப்பணித்தவராக அரக்கியைக் கொல்லத்துணிந்தார்.

''எண்ணெய்ச் சிந்துப்பாடல்கள்'' அடங்கிய இந்நூலை குருமாணாக்கர் பரம்பரையை முன்னெடுத்துக் காட்டும் பழமை பொருந்திய கிராமிய இலக்கியமாகக் கொள்ளலாம். எண்ணெய்ச் சிந்து பாடும் வழக்கம் பலகாலமாகக் கைவிடப் பட்டுவிட்டதால், இந்நிகழ்வுடன் பழக்கமில்லாத இக்காலத்தார் பலருக்கு இப்பாடல்கள் புதியதொரு படைப்பாகவும் தென்படலாம்.

முற்காலத்திலே நமது முன்னோர்கள் நிகண்டு, இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம் முதலிய புராண, வகைகள் என்பனவற்றையும், நன்னூல் போன்ற இலக்கண நூலையும் தம் இளம் வயதிலேயே மனனம் செய்ததை நாம் அறிவோம். அவ்வாறு மனனம் செய்ததன் வாயிலாக அவர்கள் தமது அறிவை அகலமும், ஆழமும், கூர்மையும் வாய்ந்ததாக ஆக்கிக்கொண்டார்கள்' ஒளிவிளக்காகத் திகழ்ந்தார்கள். பாடங்களை மனனம் செய்வதில் மாணாக்கர்களைக் குருமார் நிர்ப்பந்தித்த தன்மையையும், அலட்சியப் போக்குடைய மாணாக்க்ர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்ட பெற்றியையும் சிந்துப்பாடல்கள் தெற்றெனப் புலப்படுத்துகின்றன. எண்ணெய்ச் சிந்துப் பாடல்கள் இடத்திற்கிடம் மாறுபாடடைந்து காணப்படுகின்றன. இடைசொருகல்கள் இதற்குக் காரணமாகலாம் உதாரணமா இந்நூலில் 87ஆம் பாடலிலே—

''நெடிய பிரம்பெடுத்து நீட்டியடித்திடுவார்'' என்றும்

89ஆம் பாடலிலே —

''சட்டம்பி சட்டனவர் சற்றுமிரக்க மில்லார்
கிட்ட வரச்சொல்லிக் கிள்ளிடுவார் காதினிலே'' என்றும்

வருகின்ற அடிகளையும் அடியேன் இளம் வயதிலே பாட மாக்கியிருந்த சற்று வித்தியாசமான பின்வரும் பாடல் அடிகளையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

''சட்டம்பி பொல்லாதான் தண்டனைகள் தந்திடுவான்''
''நெடியபிரம்பாலே நீட்டியடித் திடுவான்
கொட்டான் பிரம்பாலே கூப்பிட்டடித்திடுவான்''

எது எவ்வாறிருப்பினும் பெறுமதிவாய்ந்த கிராமிய இலக்கிய மாகவும் பழமையின் சின்னமாகவும், பாரம்பரியப் பண் பாட்டின் ஒளிவிளக்காகவும் கருதப்படத்தக்க இந்த எண் ணெய்ச் சிந்துப் பாடல்களை உரியவாறு புலவோர் வியக் கும் வண்ணம் தொகுத்தும் திருத்தியும் அச்சிடுவதற்கு முன் வந்த இந்நூலாசிரியர் சைவத்தமிழ்மணி சிவ. விவேகானந்த முதலியார் அவர்கள் மிகவும் பாராட்டுக்குரியவர் ஆவார். இவர் இதற்கு முன்னரும் இவ்வாறான பல நூல்களைத் தொகுத்து வெளியிட்டதை நாம் அறிவோம். தொண் டாற்றுவதையே துணையெனக் கொண்டொழுகும் நற்குண சீலர். இவரின் கைவண்ணங்கண்ட பல நூல்கள் அச்சேற உள்ளன.

சைவத் தமிழ் உலகம் இப்பெரியாரின் அறிவு நலத்தைப் பயன்கொள்ள முந்துதல் சாலச் சிறந்தது. இறையருள் இப் பண்பாளரைப் பாதுகாத்து நல்வழி நடத்தப் பிரார்த்திக் கின்றேன்.

'' பண்பினிற் பெரியன் வல்ல
பைந்தமிழ்க் குரியன் சொல்லேர்
கொண்டுளம் புதுக்கு மன்பன்
குறைகொளாக் குணத்து நல்லோன்
கண்ணிரண் டனைய சைவ(ம்)
கவின் தமிழ்காத்து நிற்போன்
எண்ணெயின் சிந்து தந்தோன்
என்றென்றும் வாழ்க மாதோ ''

அன்புசேர்,

**சி. க. பொன்னம்பலம்**

*ஆரையம்பதி - 01,*
*1995—06—07.*

# நன்றியுரை

மட்டக்களப்புத் தமிழக எண்ணெச் சிந்துப் பாடலுக்கு ஆசியுரை வழங்கிய இராமக் கிருஷ்ண சங்க (மட்டக்களப்புக் கிளை) வணக்கத்திற்குரிய ஸ்ரீமத். சுவாமி அஜராத் மானந்தாஜீ அவர்களுக்கும், அணிந்துரை வழங்கிய வட - கிழக்கு மாகாண சபை முன்னாள் உதவிச் செயலாளர் தமிழ்மணி இரா. நாகலிங்கம் (அன்புமணி) ஐயா அவர்களுக்கும், விசேட அணிந்துரை வழங்கிய மட்டுநகர் இந்து இளைஞர் மன்றத் தலைவரும், முன்னாள் கல்வி அதிகாரியுமான திரு. ம. சிவநேசராசா B. A. அவர்களுக்கும், நூலாசிரியரைப்பற்றிப் பாராட்டுரை தந்த புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை நினைவுப்பணி மன்றச் செயலாளரும், முன்னாள் உள்ளூராட்சித் திணைக்கள உதவி ஆணையாளருமான திரு. சி. க. பொன்னம்பலம் ஐயா அவர்களுக்கும், இந் நூலாசிரியரைப் பற்றிய விபரத்தை தந்து உதவிய திரு. கா. நடராசா, கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் அவர்களுக்கும். ஆசிரியரும் மாணவர்களும் படத்தை வரைந்துதந்த செல்வன் து. திருக்குமரன் அவர்களுக்கும், இந்நூலை நல்ல முறையில் பிழையின்றி அழகாக அச்சிட்டுத் தந்த ஆதவன் அச்சக முகாமையாளர், மற்றும் தொழிலாளர்கள் யாவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இவ்வண்ணம்,

**சிவ. விவேகானந்த முதலியார்**

ஆரையம்பதி - 02.
05—06—95.



# விசேட குறிப்பு

எண்ணெய்ச் சிந்து என்ற பெயரில் **1953**ஆம் ஆண்டு வித்துவான் F. X. C. நடராஜா அவர்களால் இந்தியாவில் இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன் அவர்களைக்கொண்டு பிரசுரிக்கப்பட்டது. அதில் பல பிழைகளும் இடைசொருகல்களும் இருந்தும் அவற்றைத் திருத்தாமல், மட்டுநகர் இந்து இளைஞர் மன்றத்தினர் **1983** ஆம் ஆண்டு மறுபதிப்புச் செய்தனர்.

இந்த எண்ணெய்ச் சிந்துப் பாடல் மட்டக்களப்புத் தமிழகத்திற்கே சொந்தமானது என்பதற்கு பல ஏதுக்கள் உண்டு.

அவற்றிற் சில:

1. காறையணிதல்
2. உலக்கை எறிதல்
3. மந்திரங்களால் வலோற்காரம் செய்தல்
4. மருங்கை மணி கட்டுதல்
5. இரவல் பால் வாங்கி ஊட்டுதல்
6. தவிடுகொண்டு குழந்தையின் தேகத்தைத்தொடைத்தல்
7. விடிவிளக்கு வைத்தல்
8. வேப்பமிலைகொண்டு புகை காட்டல்
9. அட்டதிக்கும் காவல் செய்தல்
10. காயம் அருந்துதல்
11. இரவை விடல்

போன்றவை மட்டக்களப்பிற்கேஉரியசெயல்கள் என்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை அதனாலேயே இந்நூல் “**மட்டக்களப்புத் தமிழக எண்ணெய்ச் சிந்துப் பாடல்**” எனப்பெயர் பெறுகிறது.

— **ஆசிரியர்.**

# மட்டக்களப்புத் தமிழக
# எண்ணெய்ச் சிந்துப் பாடல்கள்

எண்ணெய்ச் சிந்துப் பாடல், மட்டக்களப்புத் தமிழகத்தின் தென்பகுதியில் அதாவது வெருகல் நதிக்குத் தெற்கே பாணமை வரையுமுள்ள தமிழ்க் கிராமங்கள் எல்லாவற்றிலும் பாடப்பட்டு வந்தது. இற்றைக்கு ஏறக்குறைய முன்னூறு ஆண்டுகளுக்கு முன் இப்பாடல் அறிமுகஞ் செய்யப்பட்டதென முதியோர் கூறுகின்றனர். இப்பாடலை யார் இயற்றினார் என்பது அறியப்படவில்லையாயினும் அக்காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடங்களை நடாத்திய சட்டம்பி ஆசிரியர்களில் ஒருவரேயென்று துணிந்து கூற இடமுண்டு.

இலங்கையின் கரையோர மாகாணங்களை கைப்பற்றி ஆட்சிசெய்த போத்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகியோர் தங்கள் மதங்களைப் பரப்பும் நோக்கத்துடன் பாடசாலைகளை நிறுவுமுன், கிராமங்கள் தோறும் திண்ணைப் பள்ளிக்கூடங்களிலேயே பிள்ளைகள் கல்வி கற்றனர்.

திண்ணையென்பது, வீட்டுக்கூரைகளை நீட்டித் தாழ்வாரங்களில் ஏறக்குறைய ஆறு அடி அகலமும், பத்துப், பன்னிரெண்டடி நீளமும் உடைய நிலப்பரப்பைக் கொண்ட இடமாகும். இதை களிமண் இட்டு மட்டப்படுத்திச் சாணமிட்டு மெழுகியிருப்பர். இவ்விடமே பாடசாலையாகும். ஒவ்வோர் ஊரிலும் கல்வியறிவுள்ள பெரியோர் அவ்வூர்ப் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பர். ஆசிரியருக்குச் சன்மானமாக நெல், அரிசி, காசு, எண்ணெய், தேங்காய், வேட்டி, சால்வை போன்றவற்றை மாணவரின் பெற்றோர் கொடுப்பர். இதைவிடச் சனிக்கிழமைகளில் எண்ணெய் தண்டுவதற்கு மாணவர்கள் ஒவ்வோர் வீட்டுக்கும் சென்று பாடும் பாடல் எண்ணெய்ச் சிந்துப் பாடல் எனப்படும்.

திண்ணைப் பள்ளிக்கூடங்களில் மாணவர் பனை யோலை. தாழோலை ஆகியவற்றால் பின்னப்பட்ட பாய்க ளில் இருந்தே பாடம் படிப்பர். ஆசிரியரும் பாயிலிருந்தே படிப்பிப்பார். சில இடங்களில் ஆசிரியர் நெல்குற்றும் உர லைக் கவிழ்த்துவைத்து அதன்மேல் இருப்பார்.

பனையோலை ஏடுகளில் எழுத்தாணியினால் எழுதியே மாணவர் படிப்பர். ஏனெனில் அக்காலத்தில் கடதாசி,பென் சில்கள் கிடையாது. ஏடுகள் அனேகமாகப் பனையோலையில் இரண்டங்குல அகலமும், பத்துப்பன்னிரெண்டங்குல நீளமு முள்ள சட்டங்களாக வெட்டிக் காயவைத்து, மத்தியில் துவாரமிட்டுக் கயிறு கோக்கப்பட்டிருக்கும். ஒவ்வோர் ஏட்டிலும் ஏறக்குறைய பத்துப் பன்னிரெண்டு ஓலைகள் இருக்கும். எல்லா ஓலைகளும் ஒரே அளவு நீள. அகலங் கொண்டவையாக இருக்கும்.

எழுத்தாணி என்பது கத்தியும் அதன்பின் புறத்தில் கூரான கம்பியும் பிடியும் சேர்ந்தது. கத்தியைப் பிடியினுள் மடக்கிக் கூரான கம்பியை வெளியே நீண்டிருக்க வைத்து அதனால் ஓலையில் எழுதுவர். குடையெழுத்தாணியென் பது கத்தியின்றி ஒரு கூரான கம்பியின் பின்புறம் பாரத் திற்காக நூலைச் சுற்றி வைத்துக்கொள்வர். அப்போது தான் இலகுவாக எழுதமுடியும்,

எண்ணெய்ச் சிந்துப் பாடல் மூலம் மாணாக்கர் பெற் றோர்களிடம் அன்புகொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. ஒரு பிள்ளையைத் தாய் பத்து மாதமளவும் தன் வயிற்றில் தாங்கி, ஒவ்வோர் மாதத்திலும் அனுபவிக்கும் துன்பங்கள் துலாம்பரமாகக் காட்டப்பட்டுள்ளன. அத்தோடு தாய் பிள்ளையைப் பெறும்போதும், பெற்ற பின்பும் அடையும் கஷ்டங்களும் பராபரிக்கும் முறையும் கேட்போர் கண் களில் நீர்மல்கச் செய்யும் பான்மையன ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்னும் முதுமொழியின் கருத்தை யாவருமறிய வழிவகுக்கின்றது.

பண்டைக்காலத்தில் ஆசிரியர் மாணாக்கர்களுக்குக் கல்வியூட்டும் முறைகளும், பிழை செய்தால் கொடுக்கும் தண்டனைகளும், அதனால் மாணாக்கர் அடையும் வேத னைகளும், அவர்கள் தங்கள் வாயினாலேயே சொல்லக்

கேட்கும் பெற்றோரின் கண்களில் நீரைப் பொழியச் செய்வது ஆச்சரியமல்ல.

''நெற்றியில் கல்வைத்து நேர்கதிரோன் முன்னிறுத்தி
சுற்றியடிப்பார் நாம், சுழன்றிடுவோம் தாய்மாரே''

என்று மாணவர் கூறி அழும்போது கலங்காத நெஞ்சும் கலங்கும். அன்றியும் பண்டைக்காலத் தண்டனை முறைகள் எவ்வளவு கொடுமையானது என்பதையும் உணருகிறோம்.

"உச்சியுருகுதம்மா உள்ளங்கால் நோகுதம்மா
மெச்சுமுங்கள் பிள்ளைகளின் மேனிவதங்குதம்மா''

என்று மாணாக்கர் பாடும்போது மலடிகள்கூட அழுவார்கள்

இவ்வாறு பெற்றோர், பிள்ளைகள், ஆசிரியர் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு வாழ்க்கை வரலாறு, கடைசியில் அறிவுரைகளுடன் முற்றுப் பெறுகின்றது. உபாத்தியாயர் கூலி, மருத்துவர்கள் (வைத்தியர்கள்) கூலி மற்றும், மருத்துவச்சி, வண்ணான், அம்பட்டன் போன்றோர் கூலிகளை உடனுக்குடன் கொடுக்கவேண்டுமென வலியுறுத்துகின்றது, எண்ணெய்ச் சிந்துப் பாடல். அன்றியும் நாம் எவ்வளவு செல்வம் செல்வாக்குடனிருந்தாலும், ஈற்றில் நாம் தேடிய எப்பொருளும் நம்மோடு வராது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

'' காதற்ற ஊசியும் வாராதுகாணும்
கடைவழிக்கே '' என்று பட்டினத்தடிகளின்

பாடலையும் நினைவுறுத்துகின்றது.

இவ்வாறு தாலாட்டுச் சிந்துப் பாணியில் அமைந்த ஒரு அறிவு நூல் தற்போது வழக்கொழிந்து மறைந்துவிட்டது. இதைத் திரும்பவும் பாடசாலைகளில் அறிமுகம் செய்து பாடநூலிற் சேர்ப்பின் வருங்கால மாணாக்கர்களுக்குத் தங்கள் பெற்றோர்களில் அன்பும், மரியாதையும் ஏற்படுவதுடன் ஆசிரியரில் மதிப்புமுண்டாகி நாட்டின் நற்பிரஜையாகத்திகழ வாய்ப்பளிக்கும் என்பது திண்ணம். எண்ணெய்ச் சிந்துப் பாடல் ஒரு கிராமிய இலக்கியம் என்பதில் ஐயமில்லை. இப்பாடல் ஏறக்குறைய எண்பது ஆண்டுகளுக்கு முன்பே மறைந்துவிட்டது. எனினும் தற்போது வயோதிபர்களாகவுள்ள பலர் இப்பாடல்களை விரும்பிக் கேட்டு மகிழ்கின்றனர். நான் 1971ஆம் ஆண்டு மட்/ மகிழடித்தீவு மெ. மி. பாடசாலைக்கு (தற்போது சரஸ்வதி

வித்தியாலயம்) அதிபராகச் சென்றபொழுது அங்கு 1972ம் ஆண்டில் அறிமுகஞ்செய்து, மாணவர்கள் வீடுவீடாகச் சென்று பாடல்களைப் பாடியபோது எல்லோரும் வரவேற்றனர். அத்தோடு காவடிச்சிந்து, வசந்தன் ஆட்டம் முதலியனவும் பழக்கப்பட்டன என்பது யாவரும் அறிந்ததே. தற்போதும் அந்த வழக்கம் நடைமுறையில் உண்டு.

இக்கலைகளைப் பரப்ப ஒத்துழைத்த கிராம மக்களுக்கும், பெரியார்களுக்கும், மாணவ, மாணவிகளுக்கும் என் அன்பான நன்றி. இதில் கூடிய பங்கெடுத்து உதவிய எனது உடன் ஆசிரியர்கள் திரு. உ. கனகசபை (தற்போது ஓய்வு பெற்ற அதிபர்), திருமதி. சி. தம்பையர் (தற்போது ஓய்வு பெற்ற ஆசிரியை), வசந்தன் ஆட்டம் பழக்கிய திரு. க. அழகிப்போடி ஓடாவியார், திரு. வே. பொன்னம்பலம், திரு. ஞா. சிவகுரு மனேஜர், திரு. இ. சுப்பிரமணியம் போடியார் முதலியோரைக் குறிப்பிடலாம். இவர்களுக்கு என் நன்றியும், வாழ்த்தும் உரியதாகுக.

'' சீரார் சனிியெண்ணெய்ச் சிந்து மிகவாழி
ஆராய்வார் கேட்போர் அனைவோரும் வாழியவே ''

தமிழ்மணி
சிவ. விவேகானந்த முதலியார்
(ஓய்வுபெற்ற அதிபர்)

ஆரையம்பதி-02.

— 1995 —



# மட்டக்களப்புத் தமிழக
# எண்ணெய்ச் சிந்துப் பாடல்
# சிறப்புப்பாயிரம்

சீரார் சிவன் பாதம் சிறந்தொளிரும் மாமலையும்
பேரார் மகாவலியும் பெருகிவளங் கொழிக்கும்
இரப்போர்க்கு நன்மணிகள் ஈந்தளிக்கும் நன்னாடு
சிறப்பான இராவணனும் சீர்நீதி ஏலேலனும்
மாகோன் நிசங்கமல்லன் மற்றும் பராக்கிரமன்
வாகாக ஆண்ட நல்ல வளமுடைய இலங்கையிலே
கடல்சேர் கிழக்கினிலே களப்புநீர் ஏரியுள்ள
அடல் வீரர் வாழும் அழகான மட்டுநகர்
மீன்பாடும் தேனாட்டுத் தமிழகமென் றெல்லோரும்
வான் றோய் புகழ் பரப்பும் வண்மையுள்ள பொன்னாடு
செந்தமிழர், முகம்மதியர், சிங்களர், பறங்கியரும்
சொந்தமென வாழும் துகடீர் பெருந்தேசம்
மண்டூர் பழுகாமம், முனைக்காடு, பாண்டிருப்பு
விண்டு தமிழ் பேசும் திருக்கோவில் தம்பிலுவில்
காரைநகர், ஆரைநகர், கண்ணுதலோன் சோலைநகர்
நாரைதிகழ் கொக்கு நல்லகுளம் மாமாங்கம்
வாழைநிறைசேனை வளவயல் சேர் ஏறாவூர்
வழுத்துமுயர் வந்தாறு மூலையொடு வாகரையும்
கல்லடியுப்போடை களுதாவளை கல்லாறு
பல்லோர் புகழ் நீலா வணையினொடு கல்முனையும்
சற்றுந்தளர்வில்லாச் சம்மாந்துறை வீரமுனை
மற்றும் புகழ்மேவும் குருக்கள்மடம் சித்தாண்டி
கோட்டைமுனை வீரகத்தி கொடுமுடிசேர் ஆனைப்பந்தி
தேட்டமுள்ள போரேறு திவுமுதலாம் பதிகள்
எங்கும் அருள் பரப்பும் ஆலயங்கள் தோறுந்தமிழ்
சங்கம் முழங்கத் தேவார புராண மெல்லாம்
அன்போடு பாடி அடியார்கள் எந்நாளும்
துன்பமகன்று துயர் நீங்கி வாழ்நாளில்
கல்வி கற்கப் பள்ளிகளும் கற்பிக்க ஆசானும்
இல்லா தருந் துயரம் ஏற்பட்ட காலமதில்
உள்ளூரிற் கல்வி ஓரளவு கற்றவர்கள்
பள்ளிக்கூடங்கள் தமைப் பரிந்தே தொடங்கினர்காண்

திண்ணை களிற் பள்ளிகளைத் திறம்படவே ஆக்கிவைத்து
கண்ணனைய பிள்ளைகட்குக் கல்விமொழி யூட்டினரே
சிறப்பான சேவைகளைச் சீராகச் செய்ததனால்
மறக்காமல் மாந்தரெல்லாம் மானியங்களீந்தார்கள்
வாரமொரு நாளில் வந்த சனிக்கிழமை
தாரும் சனியெண்ணெய் தக்க நல்ல தாய்மாரே
என்று மனைகள்தொறும் எழிற் பாலர் சென்றுசென்று
நன்றே நவின்று நயமொழியிற் சிந்திசைத்துப்
பரிசுபல சன்மானம் பணங் காசு தாங்கள்பெற
வரிசையாய் மாணவர்கள் வழுத்துகின்ற பாடல்களை
உரிமையுடனியற்றி உலகறியச் செய்ததை நாம்
பிரியமுட னச்சிட்டுப் பரப்ப நினைந்ததனால்
சீர்மோனை தளையெதுகை சிறப்பில்லை என்னாமல்
பார்மீது தமிழர்களின் பண்பாட்டுச் செயல் விளங்க
புரிகின்ற சேவைகளைப் புறத்தே கழிக்காமல்
அரிய செயலென்று ஆதரிப்பீர் நாவலரே
கோக் கண்டு மன்னர் குரைகடலிற் புக்கனரோ
கோ கனகப் பூக்கண்டும் கொட்டியும் பூக்கலையோ
கரவில் மனமுடைய கற்றதமிழ்ப் பிள்ளைகளே
வரவேற்றுபசரித்து வாங்கிப் படிப்பீரே
வாழ்கதமிழ் எண்ணெய் வளமான சிந்து மடல்
வாழ்கதமிழ் ஆசான்மார் வண்மையுள்ள மாணவரும்
வாழ்க தமிழ்ப் புலவோர் வளர்மொழிதேர் பண்டிதர்கள்
சூழ்வோம் தமிழ்மொழியின் தூய்மை துலக்கிடுவோம்
எண்ணெய்ச்சிந்தென்று எல்லோரும் போற்றுகின்ற
வண்ணத் தமிழ்க்கவிதை வரன்முறையுமீங்கிதுவே.

ஆக்கம்:

**தமிழ்மணி சிவ. விவேகானந்த முதலியார்**
(ஓய்வுபெற்ற அதிபர்)

ஆரையம்பதி - 02, மட்டக்களப்பு.

# மட்டக்களப்புத் தமிழக
# எண்ணெய்ச் சிந்துப் பாடல்

### காப்பு (வெண்பா)

அன்று தமிழகத்தில் ஆன்றோரின் கல்விமுறை
நன்று பகர் எண்ணெய்ச் சிந்ததனை — என்றும்
மக்கள் மறவாமல் மனங்கொள்ளத் தருவதற்கு
நக்கனருள் செய்வான் நயந்து

(தமிழ்மணி)

### சிந்து

1. சீரார் சனியெண்ணெய்ச் சிந்துதனை யான்பாடக்
காரானை மேனிக் கணபதியே முன்னடவாய்

2. முன்னாளிலாகமத்தில் முன்னுள்ளோர் சொன்னபடி
இந் நாளிலே சிறியேன் எண்ணெய்த் தமிழ்பாட

3. சால நமஸ் கரித்தேன் சரஸ்வதியே உந்தனையும்
வால சரஸ்வதியே வாக்கருள வேண்டுமம்மா

4. எண்ணெய்ச் சிந்தென்று எளியேன் உரைத்த தமிழ்
வண்ணத் தமிழ்ப்புலவீர் வரைந்து தள்ளிப்போடாதீர்

5. பூவுலகில் மானிடர்கள் பொலிந்து நிதம் வாழ்ந்திடவே
ஆவலுடன் மன்றல் செய்யும் அந்தமுறை யால் மணந்து

6. மைந்தரில்லா வாழ்வு மகிமை குறையு மென்று
சந்ததி யுண்டாக்கித் தழைத்திருக்க வேண்டுமென்று

7. ஆகமத்தி லுண்டான அரும்பெரிய நோன்பிருந்து
தாகமுடன் நல்ல தவங்கள்மிகச் செய்த பின்பு

8. ஆராயும் வேதமுடன் ஐந்தெழுத் தையும் நினைந்து
நேராத கோவிலெலாம் நேர்ந்து தபசு பண்ணி

9. அந்தி சந்தி தோறும் அன்னதா னங்கொடுத்துப்
புந்தி நொந்த சிந்தையுடன் புகழ் தருமம் மாறாமல்

10. அன்னம் பகிர்ந்து அதிதிகளை ஆதரித்துப்
பொன்னும் மணியுங் கொடுத்துப் புத்திரனைத்
தான்வேண்டி

11. தந்தையரும் தாயும் தயவுகொண்ட நாளையிலே
வந்துற்ப வித்தோங்காண் மாதாவின் உந்தியிலே

12. உற்பவித்த நாள்முதலாய் உங்கள் வருத்தமது
இத்தனை யென்று எடுத்துரைக்கப் போகாது

13. வெற்றிலை பாக்கு மிகவருந்தல் தான் மறந்தீர்
அள்ளியுண்ணுஞ்சோறு அடிக்கடியே தான்மறந்தீர்

14. இடுப்புக் கடுத்து இருதொடையும் தானுளைந்து
படுக்கநினை வல்லாது பணிவிடைமேல் ஆசையில்லை

15. ஒருமாத மாகி உதிரம் மிகக் செறிந்து
இருமாதமாகி இருவிழியும் வெண்ணிறமாய்

16. மூன்று மாதத்தில் முறைமுறையே சோகமதாய்
தோன்றும்வா யாற்பருத்துக் தூய்யபுளி மேலுவப்பாய்

17. நாலுமா தத்தில் நடையும் மிகத் தளர்ந்து
மேலும் வெளுவெளுத்து மேதினியைத் தான்மறந்தீர்

18. ஐந்துமா தத்தில் அரைவயிறு சூலாகி
மிஞ்சும் முலைகறுத்து மேனியெலாம் பச்சுடம்பாய்

19. ஆறுமா தத்தில் அடிவயிறு தான் கனத்து
ஊறு முலைப்பால் உறுமமிர்தம் போற்சுரந்து

20. ஏழுமாதத்தில் இருவிழியும் வெண்ணிறமாய்
நாளும் உறக்க மற்று நல்லோனே தஞ்சமென்று

21. எட்டுமா தத்தில் இருந்தெழும்ப மாட்டாமல்
கட்டுகள் விட்டுக் கடுப்புமிக வுண்டாகி

22. ஒன்பது மாதத்தில் ஓயாத நோக்காடாய்
துன்பமது வாகித் துயரமிக வுண்டாகி

23. மாதமொரு பத்தும் வருந்தி நிறைந்த பின்பு
வேதனருளாலே மென்மேலும் நொந்துகொண்டு

24. ஓடி மருத்துவச்சி ஒண்டொடியைத் தானழைத்து
நாடி யுறவோர்கள் நலமுடனே சூழ்ந்து நிற்க

25. காலுக் கிருப்பாருங் கைதாங்கி நிற்பாரும்
மேலுக் கிருப்பாரும் வேதனையோ வென்பாரும்

26. தாயுந் தமரும் தற்சூழ்ந்து தாமிருக்க
ஆய மருத்துவச்சி அஞ்சாதே என்று சொல்ல

27. மந்திரங்க ளாலே வலோற் காரஞ் செய்வாரும்
தந்திரங்க ளாலே தளர்வாற்றி நிற்பாரும்

28. தேவதைக்கு நேர்வாரும் தெய்வமே யென்பாரும்
நோ வதைக்குதென்று நுவன்று சலிப்பாரும்

29. இந்தப்படியே இவர்களெல்லாம் நிற்கையிலே
வந்து தனஞ்சயனும் மலர்ப்பாதத் தாலுதைக்க

30. பன்னீர்க் குடமுடைந்து பாலகனுந் தான்பிறக்க
நன்னீர்மையாக, நயந்து புகழ்ந் தெல்லோரும்

31. வீண்பிள்ளை யல்லவிது மேதினியி லெங்களுக்கு
ஆண்பிள்ளை யென்று அகமகிழ்ந்து குரவையிட்டு

32. அப்போ சிலபேர் அடியளந்து பார்ப்பாரும்
தப்பாமல் நாட்குறிப்புத் தானெழுது மென்பாரும்

33. அம்மா னடியளந்து ஆனகுறிப்பு மிட்டு
செம்மையுட னுலக்கை சீரா யெறிந்திடுவார்

34. தாயார் மருத்துவச்சி தானெடுத்து எங்களையும்
மாயன் மலரயனார் மாணடியைத் தான்தொழுது

35. வாயார வாழ்த்தி வரிசையுடன் மகிழ்ந்து
தாயார் மருத்துவச்சி தவிடுகொண்டு தான்புரட்டி

36. மஞ்சள் நீராட்டி மணிமுக்குத்தான் பிடித்து
அஞ்சனங்கள் தீட்டி அலங்காரப் பொட்டுமிட்டு

37. உடுபுடைவை தன்னாலே உள்ளீரம் தான்துடைத்து
சடுதியிலே யிடுக்கித் தாலாட்டிச் சீராட்டி

38. பூரித்துச்சிந்தை புளகித் தலங்கரித்து
பாரித்து நன்றாய்ப் பலதிக்குங் காவல்செய்தீர்

39. வேப்பமிலை கொண்டு மிகுபுகையுந்தான் காட்டி
காப்பணிந்து நன்மருங்கை கனசடங்கு செய்தீரே

40. எங்கெங்குமோடி இரவற்பால் வாங்கி வந்து
சங்கதனாலூட்டித் தான் வளர்த்தீர் மாதாவே

41. கண்ணூறு நாவூறு காற்றணைவு வாராமல்
வெண்ணீறதனால் வினை தீர்த்தீர் மாதாவே

42. பன்னிரண்டாம் நாட்கழித்துப் பண்பான தொட்டிலிலே
என்னை வளர்த்தி இனிமையுற வேயாட்டி

43. பாராட்டி நீராட்டி ஓயாமல் தாலாட்டி
சீராட்டி எங்களையும் சிறப்பாய் வளர்த்தீரே

44. சாணை யுதறித் தந்திரமாய்ப் பாய்போட்டு
பேணிவளர்த்தீரே பேறுபெற வேணுமென்று

45. காயமருந்திக் கடைச் சரக்குத் தானருந்தி
ஈயெறும்பு மொய்க்காமல் எனை வளர்த்தீர் மாதாவே

46. குடிவிளங்க நமக்குக் குமரன் பிறந்தானென்று
விடிவிளக்கு வைத்தீரே விளங்கவிரு மாதமட்டும்

47. குப்புற வீழ்ந்து குலாவித் தவழ்ந்துவந்து
செப்பமதாய் மடியில் சேருகின்ற நல்வயதில்

48. சின்னச் சதங்கை கட்டி, சிறுகாப்புத் தானுமிட்டு
வன்ன அரைஞாண் வளர்காறையு மணிந்து

49. குதலை மொழிகேட்டுக் கோலமுட னெங்களது
மதலை மொழிகேட்டு மனம்மகிழ்ந்தீர் மாதாவே

50. ஐந்து வயதில் அறிவு பொருந்துகையில்
கொஞ்சுங் குதலை மொழிக் குமரனை யின்னேரம்

51. கள்வனாய்ப் போகாமல் காவாலி யாகாமல்
சுள்ளி விறகு சுமைதலைமேல் வையாமல்

52. மாடுகள் மேய்த்து மடையனாய்ப் போகாமல்
ஆடுகள் மேய்த்து அலைந்து திரியாமல்

53. கப்பலதிலேறிக் கலாசுபற்றித் தின்னாமல்
குப்பை சுமந்து கொடும்பாவி யாகாமல்

54. பள்ளிக்கு வைக்கப் பருவமென வறிந்து
வெள்ளிக்கிழமை விடிந்தைந்து நாழிகையில்

55. ஒன்பது கோளும் உறவுகொள்ளும் வேளையிலே
இன்பமதான இரேவதி நட்சத்திரத்தில்

56. தெள்ளு தமிழுரைக்கத் தேசிகர்முன் கொண்டுசென்று
பள்ளிக்கு வைத்தீரே பரிவுடைய மாதாவே

57. நற்பச்சை யரிசி நல்ல பழமுடனும்
வெற்றிலை பாக்கு விரும்பிய பூக்களுமாய்

58. தந்தைகொண்டு வந்து தயவாக எங்களையே
எந்தை குருகையில் ஈந்தாரே இன்பமுடன்

59. ஈந்தவுடன் ஆசிரியர் இன்பமுடன் மகிழ்ந்து
ஆய்ந்த முகூர்த்தம் அரிய இரேவதியில்

60. பள்ளிக் கூடத்தில் பக்தியுடனப் போது
பிள்ளையார்க் கென்று பெரிய நிறைகுடமும்

61. வெண்கலப் பொன்விளக்கு விளங்கவே ஏற்றிவைத்து
தண்பாலமிர்தம் தயவாய் ஒழுங்கு பண்ணி

62. வாழை பலா மாங்கனிகள் வளமுடனே சுத்திசெய்து
வேழமுகத்து விநாயகர்க்குப் பூசை செய்து

63. எங்களையே ஒழுங்காய் இன்பமுட னிருத்தி
மங்கை சரஸ்வதியை மனதிலுற நினைந்து

64. ஐயன்குரு தேசிகனார் அரிவரியைத் தானெழுதி
கையிற்றந் தெங்களுக்குக் கற்பித்தார் கல்விமொழி

65. எழுத்துப் பயின்று எழுதி முடித்தபின்பு
மொழிக்கு எழுத்து முறை, முறையாகக் கற்பித்து

66. கணக்கு வகைகள் கவனமாய்க் கற்பித்து
இணக்க முடனெங்களுக்கு எழுத்துந் திரிபுகளும்

67. எண்சுவடி குழிமாற்று ஏற்றமுள்ள வருக்க பாடம்
திண்ணமாயின் றளவும் திறமையாய்க் கற்பித்தார்

68. ஆகையால் நாங்கள் அறிவுநூல் சுற்றதனால்
பாகனைய சொல்லாரே பரிவுடைய மாதாவே

69. எட்டுநாளைக் கொருக்கால் எங்கள் சனிக்கிழமை
வட்டத்தில் எண்ணெய்தண்ட வந்தோங்காண் மாதாவே

70. சனியெண்ணெய்க் காகவந்தோம் தாயே சலியாதே
இனியெண்ணெய் இல்லை யென்று ஏதுமுரையாதே

71. வீட்டிலெண்ணெய் தானும் விடுகாசு மில்லாவிட்டால்
கேட்டுக்கடன் வாங்கிக் கிருபையுடன் தந்தனுப்பும்

72. நாழியரிசியுடன் நற்பணமும் தேங்காயும்
வாழியென்று சொல்லிமனம் மகிழ்ந்திடவே தந்தனுப்பும்

73. ஓதுவித்த கூலிதனில் ஒருகாசு நின்றாலும்
பாதிவித்தை தானும் பலியாது மாதாவே

74. உப்புப் புளி மிளகு ஊறுகாய் தன்னுடனே
குப்பியில் எண்ணெய், கொண்டுவந்து தாருமம்மா

75. வேட்டிபல வஸ்திரங்கள் விதமான சால்வைகளும்
நாட்டமுடன் தந்தால் நன்மையுண்டு மாதாவே

76. நாடிநடந்து நலிந்தே துயரமுற்று
வாடிமிக நொந்து வருந்துகிறோம் தாய்மாரே

77. பாலர் படுந்துரயம் பார்க்கலையோ மாதாவே
கால்கள் கடுக்குதம்மா கமலமுகம் சோருதம்மா

78. மெல்லன வானவுடல் வெயிலில் உருகுதம்மா
நல்லனவோ உங்களுக்கு நாங்கள் படுந்துயரம்

79. தண்ணீர் தவிக்குதம்மா, தாகம் வருகுதம்மா
கண்ணீர் சொரியுதம்மா, கண்ணனைய மாதாவே

80. உச்சி உருகுதம்மா உள்ளங்கால் நோகுதம்மா
மெச்சுமுங்கள் பிள்ளைகளின் மேனி வதங்குதம்மா

81. வெயர்த்துச் சொரியுதம்மா வெந்நீர் குளித்தாற்போல்
பார்த்திருக்கலாமோ பாலர் படுந்துயரம்

82. வயிறு பசிக்குதம்மா வாய்விடாய் கொள்ளுதம்மா
துயிலும் வருகுதம்மா சோம்பல் மிகவாகுதம்மா

83. ஈனா மலடிகளோ இரக்கமிலாப் பாபிகளோ
தானாயிரங்காத சண்டாளப் பாபிகளோ

84. வந்துவெகு நேரமம்மா மதியமாய்ப் போச்சுதம்மா
தொந்தி கரையுதம்மா துலங்குமுகம் வாடுதம்மா

85. மெத்தப் பசிக்குதம்மா வீண்பொழுது போகுதம்மா
சித்தஞ் சலியாமல் தந்தனுப்பும் தாயாரே

86. எங்கள் குருவானவர்தான் இம்மட்டும் பார்த்திருந்து
வெங்கண் சிவந்து மிகுகோபம் கொண்டிடுவார்

87. பாடம் படித்துப் பழம்பாடம் ஒப்புவிக்க
ஓடிவரச் சொன்ன உபாத்தியாயர்க் கென்னசொல்வோம்

88. விடியமுதல் நாங்கள் வெளிப்படாதே யிருந்தால்
நெடிய பிரம்பெடுத்து நீட்டி அடித்திடுவார்

89. வீசியடித்திடுவார் மெய்யுதிரம் கொப்பளிக்க
கூசாமலே யடித்துக் கொடுமைகள் செய்வாரம்மா

90. சட்டம்பி சட்டனவர் சற்று மிரக்கமில்லார்
கிட்ட வரச்சொல்லிக் கிள்ளிடுவார் காதினிலே

91. நெற்றியில் கல்வைத்து நேர்கதிரோன் முன்னிறுத்திச்
சுற்றியடிப்பார் நாம் சுழன்றிடுவோம் தாய்மாரே

92. பன்றிச் சுருக்கிட்டுப் பருவவெயில் தள்ளுமென்பார்
துன்று சினமுடனே துடிக்க அடித்திடுவார்

93. கூட்டோடே பொல்லாக் கொடிய முயிறதனை
பாட்டது தப்புமென்றாற் பதைக்கவே போடுமென்பார்

94. கோதண்டந் தன்னில் கொண்டுபோய்த் தூக்குமென்பார்
ஆதண்டம் போட்டு அநியாயம் செய்திடுவார்

95. நாங்கள் படுந்துயரம் நன்மையுள்ள தாய்மாரே
நீங்கள் கண்ணாற் கண்டால் நிலத்தில் விழுந்தழுவீர்

96. மலடியறிவாளோ மக்க ளருமை தன்னை
இருடி யறிவாளோ எங்களருமை தன்னை

97. பெற்றவர்க் கல்லோதெரியும் பிள்ளை யருமையது
மற்றவர்க்கு அந்த வருத்தம் தெரியாது

98. ஈதலாலுங்களுக்கு இன்னுமொன்று சொல்லுகிறோம்
பூதலத்தை நம்பிப் புகழ்ந்து மனமகிழ்ந்து

99. தீதற்ற செல்வம் சிறப்பாய் மிகப்பெறினும்
காதற்ற ஊசிதனும் கடைவழிக்கு வாராது

100. ஆதலால் நீங்கள் அறிவுடைய மாதாவே
போக வழிதேடிப் புறப்பட்டிருக்கை நன்று

101. உபாத்தியார் கூலி உயர்மருத் துவர்கூலி
வைத்திருக்கக் கூடாது மாதாவே தந்தனுப்பும்

102. வண்ணான்றன் கூலி மருத்துவச்சி தன்கூலி
எண்ணாமல் ஈந்திடுங்கள் இன்பமுள்ள தாய்மாரே

103. நாவிதன் றன்கூலி நயந்த ஆசான்கூலி
பேசு மொழியின்றிப் பெருமையுடன் தந்தனுப்பும்

104. சீரார் சனியெண்ணெய்ச் சிந்து மிகவாழி
ஆராய்வார் கேட்போர் அனைவோரும் வாழியவே

105. பாடினோர் வாழி படித்தோர் மிகவாழி
கூடினோர் வாழி குருபாதந் தான்வாழி

106. மாடுமனை வாழி மக்களெல்லாம் தான்வாழி
ஏடு மெழுத்தாணிகளும் எப்போதும் வாழியவே

107. ஆல்போல் தழைத்து அறுகதுபோல் வேரூன்றி
மூங்கில்போல் சுற்றம் முசியாமல் வாழ்கவே.

— முற்றிற்று —

தொகுப்பு :

**தமிழ்மணி சிவ. விவேகானந்த முதலியார்**
( ஓய்வுபெற்ற அதிபர் )

**ஆரையம்பதி - 02.**

## மட்டக்களப்புத் தமிழக
## எண்ணெய்ச் சிந்துப் பாடல்
# அரும்பத விளக்கம்
## (மாணவருக்காக)

1. எண்ணெய் = எள் + நெய் குறிப்பாக நல்லெண்ணை யைக் குறித்தாலும், பொதுவாக எல்லா எண்ணெய் களையும குறிக்கும்.
2. எளியேன் — அறிவு குறைந்தவனாகியயான்
3. வண்ணத்தமிழ் — அழகான தமிழ்
4. சந்ததி — மக்கள், பரம்பரை, பிள்ளைகள்
5. ஆகமம் — சைவசமய வேதாகமங்கள்
6. ஐந்தெழுத்து — பஞ்சாட்சரம், சி, வா, ய, ந, ம
7. தபசு — விரதம், நோன்பு
8. அந்தி — மாலைப் பொழுது, சூரியன் மறையும் நேரம்
9. சந்தி — அதிகாலை, சூரியன் உதிக்கும் நேரம்
10. அன்னம் — சோறு, சாதம், உணவு
11. அதிதி — வறியோர், ஏழைகள், விருந்தினர்
12. புந்தி — மனம், சித்தம், உள்ளம்
13. உந்தி — வயிறு, உதரம்
14. பணிவிடை வேலை, காரியம், அலுவல்
15. உதிரம் — இரத்தம், செந்நீர்
16. விழி — கண், நயனம்
17. தோன்றும் வாய் — பெண்ணுறுப்பு. பெண்குறி
18. உவப்பு — விருப்பு, ஆசை
19. மேதினி — உலகம், பூமி, வையகம்
20. சூல் — கருப்பம், தாயின் வயிற்றில் இருக்கும் கருப்பம்
21. அமிர்தம் — பால், சாகாமற் காக்கும் மருந்து
22. சுரந்து — பெருகி, அதிகரித்து, நிறைந்து
23. நல்லோன் — இறைவன், கடவுள்
24. தஞ்சம் — கதி, ஆதரவு, துணை
25. கட்டுகள் விட்டு — இறுக்கமான நரம்புகள் தளர்ந்து
26. கடுப்பு — தாங்கொணா நோவு, அதிகநோவு
27. ஓயாத — இடைவிடாத, தொடர்ச்சியான
28. துன்பம் — துயரம், வருத்தம், வேதனை
29. வேதன் — பிரமன், படைத்தற் கடவுள்
30. மருத்துவச்சி — பிள்ளைப்பெறு பார்க்கும் பெண்

31. ஒண்டொடி — பெண், ஒளிபொருந்திய வளையலை அணிந்த பெண்
32. காலுக்கிருப்பார் — பிள்ளைப்பெறும் பெண்ணின் கால்களைத் தாங்கிப்பிருக்கும் பெண்
33. கைதாங்கி நிற்பார் — பிள்ளைத்தாய்ச்சிப் பெண்ணின் கைகளைத் தாங்கிப் பிடிக்கும் பெண்
34. மேலுக்கிருப்பாரும் — பிள்ளைப் பெறும் பெண்ணின் சரீரத்தைத் தாங்கிப் பிடிக்கும் பெண்
35. மேல் — உடம்பு, சரீரம், தேகம்
36. தமர் — சுற்றத்தார், இனசனங்கள் (தம்மவர் என்பதன் மரூவு)
37. தற்சூழ — தன்னைச் சுற்றிவர நிற்க
38. வலோற்காரம் — துன்பப்படுத்தி, தெண்டித்து, கட்டாயப்படுத்தி
39. நுவன்று — மனம் வருந்தி, மனம்மிகச் சோர்ந்து
40. தனஞ்செயன் — புத்திரன், மகன், குழந்தை
41. மலர்ப்பாதம் — மலர்போன்ற மென்மையான கால்கள்
42. பன்னீர்க்குடம் — தாயின் வயிற்றுக்குள் குழந்தை இருக்கும் தண்ணீர்ப்பை
43. நன்னீர்மை — நல்லெண்ணப், சுமுகமாக
44. நயந்து — விரும்பி, மகிழ்ந்து, ஆசையுடன்
45. அகமகிழ்ந்து — மனம்மகிழ்ந்து, சந்தோஷமடைந்து
46. குரவையிட்டு - மகிழ்ச்சி ஒலியெழுப்பி (மட்டக்களப்பில் ஆண்பிள்ளை பிறந்தால் குரவையிட்டு உலக்கை எறிவர். பெண்பிள்ளை பிறந்தால் வாருகல் என்னும் ஈர்க்குக்கட்டால் கூரையில் தட்டி எறிவர்.
47. நாட்குறிப்பு — பிறந்தநேரம், திகதி, மாதம், நாள் நட்சத்திரங்களைக் கணித்தல்(இதன்படியேதான் குழந்தையின் வருங்கால சுப, அசுப பலன்களைக் கணிக்க முடியும்.
48, உலக்கையெறிதல் — மட்டக்களப்புத் தமிழகத்தில் ஆண் குழந்தை பிறந்தால் அவன் வீரனாக வரவேண்டுமென்பதற்காக தகப்பன் அல்லது தாய்மாமன் குழந்தை பிறந்த வீட்டின் கூரைக்கு மேலாகச் செல்லும்படி உலக்கை (பெரும்பாலும் பாலைமர உலக்கை) மூன்று முறை எறிவர்.
49. மாயன் — கிருஷ்ணன், கண்ணன், காத்தற்கடவுள்
50. மலரயன் — பிரமதேவன், படைத்தற்கடவுள்
51. மாணடி — மாட்சிமை, பொருந்திய பாதம்
52. தொழுது — வணங்கி, கும்பிட்டு
53. சடுதியிலேயிடுக்கி — கொடுங்கைக் கைகளிலேந்தி

54. பூரித்து — மகிழ்ந்து, புளகாங்கிதமடைந்து
55. சிந்தை — மனம், உள்ளம்
56. புளகித்து — மனமகிழ்ச்சியடைந்து
57. அலங்கரித்து — அழகுபடுத்தி
58. பாரித்து - பாராட்டி, பெருமைப் படுத்தி, நிலைப் படுத்தி
59. மருங்கை — குழந்தை பிறந்த முப்பதாம் நாள் வீட்டுக் குற்றங்களை நீக்கிக் குழந்தையின் கையில் மருங்கைச் செடியின் தடிகளினாற் கடைந்த மணிகளைக் கோத்துக் கையில் காவலாகக் கட்டுவர். இதனாலேயே ''மருங்கை'' என முப்பதாம் நாள் சடங்கிற்குப் பெயர் வந்தது. அன்று இனசனங்களுக்கும், வண்ணான், அம்பட்டன், மருத்துவச்சி முதலானோருக்கும் விருந்து வைப்பர். குழந்தையின் தலைமயிர் வழிக்கப் பட்டு தாய்க்கும் குழந்தைக்கும் நீராட்டுவர்.
60. கண்ணூறு — (கண் + ஊறு) மனிதரின் கண்திருஷ்டி
61. நாவூறு — (நா + ஊறு) கெட்ட சனங்களின் நச்சுச் சொற்கள், தோஷவார்த்தை
62. காற்றணைவு (காற்று + அணைவு) கெட்ட தேவதைகளின் உடற்காற்று நச்சுக்காற்று
63. ஓயாமல் — இடைவிடாமல், தினமும், தொடர்ச்சியாக
64. சாணை — குழந்தைகள் மல, சலங் கழிக்கப் பாவிக்கும் சீலைத்துண்டுகள்
65. பேறுபெற — நன்மையடைய, மேன்மை பெற, உயர்ச்சியடைய
66. காயம் — பிள்ளைப்பெற்ற பெண்களுக்கு நோயணுகாமலும், குழந்தைகளுக்குப் பாலூட்டி வளர்க்கவும், தேக நோய்களை நீக்கவும் கொடுக்கும் சித்தவைத்திய மருந்துக்கூட்டு. (ஓமம், வெள்ளைப்பூடு, தேன், பெருங்காயம், வெந்தயம் என்பன சேர்த்துச்செய்யும் மருந்து)
67. கடைச்சரக்கு - ஓமம், வேர்க்கொம்பு, இஞ்சி, உள்ளி போன்ற மருந்துகள்
68. குலாவி — மனம் மகிழ்ந்து தவழ்தல்
69. அரைஞாண் — ஆண் குழந்தைகளுக்கு இடுப்பில் கட்டும் கயிறு. சிலர் தங்கம், வெள்ளி இவற்றினாலும் செய்து அணிவிப்பர்
70. காறை — இது ஆண்கள் அணியும் ஓர் ஆபரணம், கழுத்தில் அணிவது. வெள்ளி, தங்கம் இவற்றினால் செய்யப்படுவது. கழுத்தெலும்புக்குக் காறை எலும்பு என்று சொல்லப்படுவதும் நோக்கத்தக்கது.

71. குதலை, மதலை — குழந்தைகள் பேசும் கொச்சை சொல் பேச்சுக்கள்

72. காவாலி — நல்லொழுக்கமற்றவன் துஷ்டன்

73. கலாசு — (பண்டைக் காலத்தில் கப்பல்களைச் செலித்துவதற்கு பாய்மரங்களையும், சீலைகளையும் உபயோகித்தனர். காற்று இல்லாதபோது தண்டு, சவள் இவற்றை உபயோகித்தனர்) தண்டு, சவள் இவையே கலாசு.

74. நாழிகை — நேரம், கால அளவு, இரண்டரை மணித்தியாலம் கொண்டது ஒரு நாழிகை

75. ஈந்தார் கொடுத்தார். ஒப்புவித்தார்

76. கோள் — சூரியன் முதலான ஒன்பது கிரகங்கள்

77. வேழமுகம் - யானைமுகம்

78. அரிவரி — ''அ'' முதலான எழுத்துவரிசைகள்

79. பாகனைய - பாகு போன்ற இனிமையான

80. பரிவு — இரக்கம், அன்பு

81. வட்டத்தில் — ஒழுங்குச் சுற்று முறையில்

82. சலியாதே — மனம் வருத்தப்படாதே, கலங்காதே

83. உரையாதே — சொல்லாதே, கூறாதே

84. விடுகாசு - செலவழித்தபின் மிஞ்சும் சில்லறைக்காசு

85. நாழியரிசி — ''நாழி'' யென்னும் கொத்துச்சுண்டு. தானியம் அளக்கும் கருவியளவு கொண்ட அரிசி

86. குப்பி — போத்தல். சிறு போத்தல் பாத்திரம்

87. நாட்டமுடன் — விருப்புடன், மகிழ்வுடன்

88. கமலம் - தாமரைமலர்

89. ஈனாமலடி — குழந்தை பெறாத பெண்

90. சண்டாளர் - தீயவர், பாபத்திற்கு அஞ்சாத கெட்டவர்கள்.

91. மதியம் — உச்சிப்பொழுது, சூரியன் நம்தலை உச்சிக்கு மேல் நிற்கும் நேரம்.

92. தொந்தி — கொழுத்தவயிறு வண்டிவயிறு

93. வெங்கண் — கோபக்கண், கொடிய பார்வை

94. மெய் - சரீரம், தேகம், உடம்பு

95. கொப்பழிக்க பீறிட்டோட, வெளியேவர, தெறிக்க

96. சட்டம்பி — ஆசிரியர், உபாத்தியாயர்

97. சட்டன் — கடும் சட்டங்களைப் போடுபவர்

98. பன்றிச்சுருக்கு — விவசாயிகள் தங்கள் பட்டிகளில் அடங்காத மாடுகளுக்கு முட்டிக்கால் போடுவதுபோல் அடங்காத மாணவர்களுக்கு கட்டுதல். அப்படிக்கட்டி

னால் பன்றிகள் தலையை கவிழ்ந்துகொண்டு நடப்பதுபோல் நடக்கவேண்டும்.

99. கோதண்டம் — மகாதண்டம், கடுந்தண்டம், இதுவும் பாடம் படிக்காத மாணவருக்குக்கொடுப்பது. மரக்கிளையில் அல்லது வீட்டு வளை மரத்தில் உயரமான இடத்தில் கயிற்றைக்கட்டி மாணவனைத் தூக்கிப்பிடித்து உயர்த்தி கயிற்றைக் கையினாற் பிடிக்கச் செய்தபின் கீழே நிலத்தில் எழுத்தாணிகளைக் கூர் முனைப்பகுதி மேல்நோக்கி நிற்கும்படி நிலத்தில் நட்டு வைத்து மாணவனை அடித்தல், கைவிட்டால் காலில் எழுத்தாணிக்கூர் குத்திக்காயப்படுத்தும். (கோ + தண்டம்) இராஜ தண்டனை.

100. ஆதண்டம்—கடுமுடுக்கு, சட்டதிட்டம், சித்திரவதை

101. இருளி — வயது ஏறியும் பூப்படையாத பெண்

102. பூதலம் — இவ்வுலகம், பூமி

103. காதற்ற ஊசி —கண்ணறுந்த ஊசி, புடைவை தைக்கும் ஊசியில் நூல் கோக்கும் கண் இன்றேல் அது பிரயோசனப்படாது. அதுபோல் அப்படிப்பட்ட பிரயோசனமற்ற பொருள் கூட நம்மரணத்தின் பின் நம்மோடு கூடவரமாட்டாது.

104. கடைவழி — நம் மரணத்தின் பின் செல்லும்வழி. இறுதியாத்திரைப் பாதை.

105. நாவிதன் — அம்பட்டன், மயிர் வினைஞன்

106. ஆசான் — குரு, ஆசிரியர், உபாத்தியாயர், தலைவன்

107. முசியாமல் — அழிந்து விடாமல், குறைவுபடாமல்

108. மொழிக்கு எழுத்து முறை — சொற்களுக்கு எழுத்துக்களை எழுதி வாசித்தல்.
(உ + ம்) அப்பா = அ + ப் + பா என்பது போல்.

109. எண்சுவடி — 1, 2, 3 முதலிய இலக்கங்கள், ஒன்று, பத்து, நூறு, ஆயிரம் முதலான தான முறைகள், கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் முறைகள்.

110. குழிமாற்று — பேரினமாக்குதல், சிற்றினமாக்குதல் முறைகள் (உ+ம்) அங்குலத்தை அடி, யார், சங்கிலி, பெர்லாங், மைல் ஆக்குதல் போன்றவைகள், பேரின மாக்கும் முறை, தொன்னை, அந்தர், இறாத்தல், அவுன்ஸ் ஆக்குதல் போன்ற சிற்றினமாக்குதல்.

111. வருக்கபாடம் — வர்க்கம், வர்க்கமூலம் காணும் முறைகள்

112. தண்டுதல் — பெறுதல், வாங்குதல், அறவிடல்

ஆக்கம் :

## தமிழ்மணி சிவ. விவேகானந்த முதலியார்

இல. 20, தாமரைக்கேணி றோட்,

மட்டக்களப்பு.

★ நெறி ★

"சேர்" (Sir) எனச் செல்லமாக அழைக்கப்படும்

## தமிழ்மணி
## சிவ. விவேகானந்த முதலியாரின்
# பண்பாட்டுப்பணிகள்

**பிறந்தது:** திரு. வே. மூத்ததம்பி நொத்தாரிஸ் சிவசிதம்பரப் பிள்ளை விதானையாருக்கும், திருமதி. ஆறுமுகம் விசாலாட்சியம்மா அவர்களுக்கும் 1920-11-12ஆம் நாள் செல்வப்புதல்வனாகப் பிறந்தவர் சிவ.விவேகானந்த முதலியார்.

**பயின்றது:** ஆரையம்பதி மூத்ததம்பி நொத்தாரிஸ் மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைத் தொடங்கி, கல்லடியுப்போடை விவேகானந்த தமிழ் வித்தியாலயத்திலும், சிவானந்த வித்தியாலயத்திலும் கல்வி பயின்று மட்டக்களப்பு அர்ச். அகுஸ்தீனார் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியரானார்.

**வளர்ந்தது:** ஈழத்தின் புகழ்பெற்ற அறிஞர்களான ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தர், திரு. ச. அம்பலவாணர் B. Sc., திரு. ச. அம்பிகைபாகன் B. A., திரு. க. கணபதிப்பிள்ளை F. R. G. S., மகா வித்துவான் கலாசூரி F. X. C. நடராஜா. ஞானச் சகோதரர் திரு. எஸ். பிலிப் S. S. J. போன்றவர்களின் கற்பித்தலில் வளர்ந்தவர்.

**கடமையேற்றது:** 1947ல் கல்முனை சென்மேரிஸ் ஆங்கில பாடசாலையில் ஆரம்பித்த கல்விப்பணி தான்பயின்ற ஆரையம்பதி மூத்ததம்பி மெ.மி. தமிழ் வித்தியாலயம், மகா வித்தியாலயம் மகிழடித்தீவு மெ. மி. வித்தியாலயம், வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம் என வளர்ந்து இறுதியில் ஆரையம்பதி மகா வித்தியாலயத்தில் 1978ல் ஓய்வு பெற்றவர்.

**புரிந்தது / நிறைந்தது:** கல்விப்பணியில் ஓய்வு பெற்றாலும் இலக்கியப் பணியிலும், சமயப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, கல்லடியுப்போடை இராமக்கிருஷ்ண மிஷன் ஞாயிறு பாடசாலை உள்ளிட்டு, ஆரையம்பதி, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் சேவையாற்றும் பண்பாளர்.

## அன்னார் பதிப்பித்த நூல்கள்:

1. வைரவ சுவாமி காவியம் — 1949ஆம் ஆண்டு
2. மாரியம்மன் உற்பத்தி — 1950ஆம் ஆண்டு
3. மரணச்சடங்குப் பாடல்கள் — 1991ஆம் ஆண்டு
4. கந்தசஷ்டி விரத வணக்கப் பாடல்கள் + வாரப்பதிகங்கள் — 1992ஆம் ஆண்டு
5. மாரியம்மன் (சின்னக்) காவியம் — 1992ஆம் ஆண்டு
6. சிவன்ராத்திரி விரத தோத்திரப் பாடல்கள் — 1993ஆம் ஆண்டு
7. கழுகுமலைப் பத்து+அவினாசிப்பத்து — 1994ஆம் ஆண்டு
8. தம்பிலுவில் திருநாவுக்கரசுநாயனார் குருகுல ஆதீன சித்திரச் சதயச் சிறப்பு மலர் — 1995ஆம் ஆண்டு
9. மாரியம்மன் கும்மி — 1983ஆம் ஆண்டு
10. மட்டக்களப்புத் தமிழக எண்ணெய்ச் சிந்துப் பாடல்கள் — 1995ஆம் ஆண்டு

## தாமே இயற்றிய நூல்கள்

1. இந்து சமய சாரம் — 1984ஆம் ஆண்டு
2. அவலந் தீர்க்கும் ஆரையூர் மாரியம்மன் காவடிச் சிந்து — 1984ஆம் ஆண்டு
3. விஞ்ஞான தத்துவங்களும் இந்து சமயக் கோட்பாடுகளும் — 1984ஆம் ஆண்டு
4. கிருஷ்ண ஜயந்தி தாலாட்டுப் பாடல் — 1986ஆம் ஆண்டு
5. சுவாமி விபுலானந்தர் வரலாற்றுக் கும்மி — 1992ஆம் ஆண்டு
6. ஏர் முனைக்கு நேர் இங்கே எதுவுமேயில்லை (நகைச்சுவை நாடகம்)
7. நாங்களும் கோயிலுக்கு வருகிறோம் (சைவ சமய நாடகம்)
8. குமணமன்னன் (வானொலி நாடகம்) வெளிவந்தது — 1994ஆம் ஆண்டு
9. கிருஷ்ணன் தூது(வானொலி நாடகம்) — 1994ஆம் ஆண்டு
10. தமயந்தி சுயம்வரம் (வானொலி நாடகம்) — 1994ஆம் ஆண்டு
11. எமகண்டம் பாடிய காளமேகம் (வானொலி நாடகம்) — 1994ஆம் ஆண்டு
12. மணிமேகலை (வானொலி நாடகம்) — 1992ஆம் ஆண்டு

13. தருமரும் பொய் சொன்னாரோ
(நகைச்சுவை நாடகம்) 1992ஆம் ஆண்டு

14. விருத்தமெனும் ஒண்பாவிற்குயர்
கம்பன் (வானொலி நாடகம்) 1992ஆம் ஆண்டு

இன்னும் விபுலானந்தர் நூற்றாண்டு விழா கட்டுரைகள் பல வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

### தனிப்பாடல்கள்

1. மரம் நடுவோம் வாரீர் (சூழல் பாதுகாப்பு)
2. நெசவுத் தொழிலின் மாண்பு
3. பல இரங்கற் பாடல்கள் என்பன.

### தொகுத்து வைத்துள்ள நூல்கள்

1. பராயணத் திருப்புகழ்
2. மாரியம்மன் பதிகம்
3. கண்ணகியம்மன் சிந்து
4. கருடப்பத்து
5. மாதப்பதிகம்
6. சனிபகவான் தோத்திரம்
7. நவக்கிரக தோத்திரம்
8 மட்டக்களப்புத் தமிழக பிள்ளையார் கதை
9. மாரியம்மன் பல வரிக்காவியம்

இவரது நற்பணி தொடர எம்பிரானருளை
வேண்டிநிற்கும்,

**அன்பன்,**

**காசுபதி நடராசா**
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், ஆரையம்பதி.

PONNAMBALAVIDDIYALAYAM LIBRARY
Book No. ........
J/KARANAVAI ★ KARAVEDDY ★

200

| 294.5 | 205 |
| --- | --- |
| வகுப்பெண் | வரவுப்பதிவெண் |

யா/கரணவாய் பொன்னம்பலவித்தியாலயம்
நூலகமும் கற்றலுக்கான வளநிலையம்
இப்புத்தகம் மேற்குறிப்பிடப்பட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ ஒப்படைக்கப்படல் வேண்டும். தவறின் தண்டப்பணம் அறவிடப்படும்.

ஆதவன் அச்சகம், அரசடி, மட்டக்களப்பு.

065 - 2076